## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.303/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கன்னியம்மாள் |
| தகப்பனார் / கணவர் | .. | ராமகிருஷ்ணன் |
| வயது | .. | 36 |
| தொழில் | .. | கூலி |
| கிராமம் | .. | பெருங்கட்டூர் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் புதிய சர்வே எண்.840, பழைய சர்வே எண்.338 ஆகும். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரதிவாதி சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் சதுர அடி என்ன என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் கிழக்கு மேற்கு 13.5 அடி, தெற்கு வடக்கில் 180 அடி ஆகும். மேற்படி ஆவணத்தில் சதுரடி குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.1ல் 2430 சதுர அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. என் மாமனார் என் கணவருக்கு எழுதிய தானசெட்டில் மெண்ட் பத்திரத்தில் (வா.த.சா.ஆ.2) உள்ள சதுர அடி தெரியுமா என்றால் கிழக்கு மேற்கு 27 அடி, வடக்கு தெற்கு 180 அடி ஆகும். அதில் வா.த.சா.ஆ.2 ல் எத்தனை சதுரடி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அதில் 4860 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 மற்றும் வா.த.சா.ஆ.2 ஆவணங்களில் உள்ள சதுரடியை மறைத்து நான் இந்த தாவாவை தாக்கல் செய்யதுள்ளேன் என்றால் சரியல்ல. 4860 சதுரடிக்கு அரசாங்கம் இலவச நத்தம் வீட்டு மனை வழங்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வருவாய்த்துறை வரைபடம் நான் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஒரு வரைபடம்

இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். UDR க்கு முந்தைய அளவு எப்படி தெரியும் என்று சொன்னால் எனக்கு தெரியும். வா.த.சா.ஆ.3 ல் UDR ல் திருத்தம் செய்ய கோரி மனு கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதில் எவ்வளவு அளவு திருத்தம் செய்ய வேண்டும் என்று அளவு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.7 அறிவிப்பிலும் எவ்வளவு அளவு திருத்தம் செய்ய வேண்டும் என்று அளவு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணம் செலுத்தி நிலஅளவையர் வந்தார், அவ்வாறு அளக்கும் போது தற்போது உள்ள அளவு தான் வந்தது என்றால் நிலஅளவையர் வந்து அளந்தார், அளந்தபோது இந்த இடம் என்னுடையது என்ற போது பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை. 1956, 1960 ஆண்டு கிரையப் பத்திரத்திங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரை தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தாவா இடத்தில் உள்ள அளவை தான் நிலஅளவையர் அளந்து காண்பித்தார் என்றால் என் இடத்தை தான் அளந்து காண்பிக்க சொன்னேன். நிலஅளவையர் சரியாக தான் அளந்தார்கள் என்றும், நான் தான் மிகைப்படுத்தி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வீணாக பிரதிவாதி எங்கள் சொத்தை அபகரித்தார் என்றும், அதேபோல நிலஅளவையர் சரியாக அளக்கவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. UDR க்கு முன்பே தாவா சொத்தின் அளவு இல்லை என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**